Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.6/2025

Dated 11-03-2026
Deposition of witness for : PW 6

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அங்கையர்கன்னி | வயது | : | 43 |
| கணவர் பெயர் | : | பிச்சையா | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | தஞ்சாவூர் | தொழில் | : | டைலர் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused 1,2,3 present**

**Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் மேற்படி முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன்.

2) இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது.

3) போலிசார் என்னை விசாரிக்கவில்லை

அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி

கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

1) போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் அப்போது 20.5.2024 ம் தேதி இரவு சுமார் 9.30 மணியளவில் நான் என் வீட்டில் இருந்தபோது அற்புதம் என்பவர் வீட்டில் இரண்டு பேர் கதவை தட்டினார்கள் என்றும் அப்போது அற்புதம் கதவை திறந்தபோது அவரை தள்ளிக்கொண்டு வீட்டிற்குள் சென்றனர் என்றும்,

2) பிறகு வீட்டிற்குள் அய்யோஅய்யோ என்று சத்தம் கேட்டது என்றும் அந்த இரண்டு பேரும் வெளியே வந்தபோது அவர்கள் அருண் மற்றும் சத்யசீலன் என்பது தெரியவந்தது என்றும் அவர்கள் நீலநிற இரு சக்கரவாகனத்தில் ஏறி வடக்கு வாசல் பக்கம் போய்விட்டனர் என்றும்

3) சிறிது நேரத்தில் அற்புதம் மனைவி சுபா தலையில் காயத்துடன் அவரது பேரக்குழந்தை சந்திரலேகாவுடன் வந்தது என்றும் நான் என்ன ஆச்சு என்று கேட்டபோது என்னையும் எனது கணவரையும் எனது மருமகன் சக்திவேலுவின் தங்கச்சி மகன் அருண் அவனது கூட்டாளிகள் வெட்டிவிட்டனர் என்று சொன்னார் என்றும்,

4) சரியென்று வீட்டிற்குள் போனபோது சிறிதுநேரத்தில் ஜான் பிரிட்டோ பள்ளி அருகில் ஒரே சத்தமாக இருந்தது என்றும் ஓடி போய் பார்த்தபோது அற்புதம் தலை சிதைக்கப்பட்டு இரத்த வெள்ளத்தில் ரோட்டு ஓரத்தில் பிணமாக கிடந்தார் என்றும் சுபா என் புருசனை அருணும் அவனது கூட்டாளிகளும் வெட்டி கொன்னுட்டாங்களே என்ற கதறிகொண்டிருந்ததாக சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மையை

மறைத்து  பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை என எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது.

VELMURUGAN P

Digitally signed by VELMURUGAN P
Date: 2026.03.12 10:01:19 +0530